ஜேக்கப் மெட்ரிகுலேஷன் பள்ளி , மணவாள நகர்

ஜூலை-15, காமராஜரின் பிறந்த நாளை முன்னிட்டு கல்வி வளர்ச்சி நாள் விழா மற்றும் தமிழ் இலக்கிய மன்றத்தின் உறுப்பினரை குடவோலை முறையில் தேர்வு செய்யும் முப்பெரும் விழா கொண்டாடுவதற்கு முப்பள்ளியின் தமிழ்த்துறை இணைந்து மாணவர்களின் கல்வி நலம் சார்ந்து விழாவினை அனைத்து வகுப்பு வாரியாக ஓவியம் வரைதல்,பேச்சு திறன்,நடித்தல் திறன் போன்ற திறன்களை வெளிப்படுத்தவும், மாணவர்களுக்கு நேரடியாக வகுப்பில் அந்தந்த வகுப்பாசிரியர் வாயிலாக போட்டியை நடத்தி முடித்து மாணவர்களுக்கு பரிசு மற்றும் நற்சான்றிதழ் வழங்கி (Certificate) கொடுத்து சிறப்பிக்க முப்பள்ளியின் முத்தாழ்ப்பாய் திகழும் மதிப்பிற்குரிய ஜேக்கப் மெட்ரிக் குழுமப் பள்ளியின் தாளாளர் அவர்களின் ஆலோசனையை கேட்டும் விழாவினை சிறப்பித்து தர ஒப்புதல் அளிக்குமாறும் முப்பள்ளியின் தமிழ்த்துறை சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் தமிழ் இலக்கிய மன்றத்தின் உறுப்பினர்களை தேர்வு செய்யும்போது ஒண்டிக்குப்பம் தொடக்க பள்ளியில் 5-ஆம் மாணவர்கள் இலக்கிய மன்றத்தின் தலைவர். செயலாளர் மற்றும் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட வேண்டும்.

ஜேக்கப் மெட்ரிக் உயர்நிலை பள்ளி, மணவாளநகர் மற்றும் ஜேக்கப் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பெரியகுப்பம் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

குடவோலை முறையில் வாக்களிக்க 10-ஆம் வகுப்பு மாணவர்களும் வாக்களிக்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.










முறை
தேர்தல் 2024
செயலாளர்
துணை
தலைவர்


தலைவர்


குடவோலை
முறை
தலைவர்




குடவோலை
முறை
தேர்தல் 2024
துணை
செயலாளர்
செயலாளர்








குடவோலை
முறை
தேர்தல் 2024

09.07.2024 அன்று  தமிழ் இலக்கிய மன்ற தேர்தல் சோழர்கால முறையான குடவோலை முறையில் காலை 10 மணி அளவில் சிறப்பு ஜெபத்தோடு நடைபெற்றது. தேர்தலை ஜேக்கப் கல்வி குழுமத்தின் நிறுவனர்  திரு.ஜே.ஒய்.ஜேம்ஸ் ஜெயராஜ் M.A.,B.Ed.,LLB.D.ship. ,அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தேர்தலை தலைமையேற்று துவக்கி வைத்தார். பள்ளியின் முதல்வர் திருமதி.ஜி.ஜாய்ஸ் மரியா M.A.,B.Ed., அவர்கள் தேர்தலை நடத்த முன்னிலை வகித்தார். பள்ளியின் கல்வி ஆலோசகர் திருமதி.வித்யா சங்கரன், துணை முதல்வர் திரு.ஜோசப் ஜான்சன் மற்றும் ஒருங்கிணைப்பாளர் உடன் இருந்தார்கள்.

தேர்தலானது சங்ககால முறையான குடவோலை முறையில் பானை வைத்து பனையோலையினைக் கொண்டு மாணவர்கள் உறுப்பினர்களுக்கு வாக்களித்தனர்.வாக்கானது ஒன்பதாம் மற்றும் எட்டாம் வகுப்பு மாணவர்களை தலைவர், துணைத் தலைவர் மற்றும் செயலாளர் தேர்வு செய்ய வழிவகை செய்யப்பட்டது .பின்னர் தேர்தலை தலைமை ஆசிரியர்,ஒருங்கிணைப்பாளர் மற்றுமுள்ள ஆசிரியர்கள் கண்காணித்தனர்.மேலும் மாணவர்கள் சோழர்கால முறையான குடவோலை முறையில் தேர்தலை பற்றி அறிந்து கொண்டது நல்ல ஒரு செய்தியாக இருந்தது என்று கூறினர்.

குடவோலை முறை தேர்தல் வாக்கு எண்ணிக்கை

11-07-2024 மாலை 4 : 30 மணியளவில், வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. இதில் தேர்தல் கண்காணிப்பாளர் வாக்குகளை எண்ணி முடித்தார்கள்.










குடவோலை முறை தேர்தல் முடிவுகள்

வாக்கு எண்ணிக்கை விவரம்

தலைவர்

1 . மு. சபரி - அ - 270

2 . ரா. முகுந்தன் -ஆ - 102

3 . பா. பிரதீப் - இ - 85

செல்லாத வாக்கு - 3

460

வெற்றி பெற்றவர் :

மு. சபரி - ஒன்பதாம் வகுப்பு - அ பிரிவு (தலைவர்)

துணைத்தலைவர்

1 . இ. கனிஷ்கா - ஈ - 92

2 . ந. வேதாஶ்ரீ - உ - 263

3 . ச. வன்சிகா - ஊ - 98

செல்லாத வாக்கு - 07

460

வெற்றி பெற்றவர் :

ந. வேதாஶ்ரீ - ஒன்பதாம் வகுப்பு ஆ பிரிவு (துணைத்தலைவர்)

செயலாளர்

1 . ஜெ . ஜிஜெந்திரன் – எ - 211

2 . பி. சாந்தனு - ஏ - 101

3 . தி.ஹரிஷ் - ஐ - 144

செல்லாத வாக்கு – 04

460

வெற்றி பெற்றவர் :

ஜெ. ஜிஜெந்திரன் - எட்டாம் வகுப்பு ஆ பிரிவு (செயலாளர்)

துணை செயலாளர்

1 . ஶ்ரீ. தேஜாஶ்ரீ – ஒ - 139

2 . ரா. கனிஷ்கா ஶ்ரீ - ஓ - 153

3 . ம. பிரகன்யா - ஔ - 165

செல்லாத வாக்கு – 03

460

வெற்றி பெற்றவர் :

ம. பிரகன்யா- எட்டாம் வகுப்பு ஆ பிரிவு (துணை செயலாளர் )





இன்று காலை முத்தமிழ் வெள்ளி நாளில் குடவோலை முறை தேர்தல் முடிவுகள் திருமதி. வித்யா சங்கரன் அவர்களால் காலை வழிபாட்டில் அறிவிக்கப்பட்டது . வெற்றி பெற்ற இலக்கிய மன்ற உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்கள் . குடவோலை முறை தேர்தல் இனிதே முடிவுபெற்றது .